QB365 Student Learing Managemnet System
Exam Name: மாதிரிக் காலாண்டுத் தேர்வு
Std: 9th Standard - Tamil
Chapter: அமுதென்று பேர் - திராவிட மொழிக்குடும்பம், அமுதென்று பேர் - தமிழோவியம், அமுதென்று பேர் - தமிழ்விடு தூது, உயிருக்கு வேர் - நீரின்றி அமையாது உலகு, உயிருக்கு வேர் - புறநானூறு, உள்ளத்தின் சீர் - ஏறு தழுவுதல், உள்ளத்தின் சீர் - மணிமேகலை, உள்ளத்தின் சீர் - திருக்குறள், உள்ளத்தின் சீர் -கற்கண்டு (இலக்கணம்) - தொடர் இலக்கணம், ஆகுபெயர், உள்ளத்தின் சீர் -விரிவானம் (துணைப்பாடம்) - தாய்மைக்கு வறட்சி இல்லை!, உள்ளத்தின் சீர் -கவிதை பேழை (செய்யுள்) - மார்கழி பெருவிழா

Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக

1.1 சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளிலீஸ்வரன் அணையைக் கட்டியது
2 மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்
3 மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன
4 நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்
5 சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்

பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க

2.1 நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.
2 தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
3 மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.
4 கிணற்றுத் தண்ணீர் வெள்ளம் கொண்டு போகாது.

அகராதியில் காண்க

3.1 இமிழ்தல்
2 இசைவு
3 துவனம்
4 சபலை
5 துகலம்

QB365 Study Material QUESTION BANK 365

மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

4.எ கா மேலும் கீழும்:
ஆரிப் தொன்னத்தில் நம்பிக்கை இல்லாமல் குமார் மேலும் கீழும் பார்த்தான்
1. மேடும் பள்ளமும்
2. நகமும் சதையும்
3. முதலும் முடிவும்
4. கேளிக்கையும் வேடிக்கையும்
5. கண்ணும் கருத்தும்

நயம் பாராட்டுக

5.(கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம், ஆகியவை இடம்பெற வேண்டும்.
விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளித்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலக்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வென்றிவேனே - ம.இலெ.தங்கப்பா

6.கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம்,அணி நயம், ஆகியவை இடம்பெற வேண்டும்
கல்லும் மலையும் குதித்துவந்தேன் -பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்
ஏறாத மேடுகள் எறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். - கவிமணி

கடிதம்

7.வரவேற்பு மடல் எழுதுக.
சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

நெடுவினா

8.'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

சிறுவினா

9.அளவையாகுபெயர்களின் வகைகளை விளக்குக.

பகுபத உறுப்பிலக்கணம்

10.கொடுத்தோர்

11.அறைந்தனன்

இலக்கணக் குறிப்பு

12.நிறுத்தல்

13.அடுபோர்

14.மாற்றுமின். பரப்புமின்

15.தாழ்பூந்துறை

3 Marks

16.திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்கு தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

17.தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.

18.அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

19.நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

20.ஏறு தழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?

21.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

2 Marks

22.நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

23.புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

24.கண்ணி என்பதன் விளக்கம் யாது?

25.'கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

26.உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

27.உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே — குறிப்புத் தருக.

28.நீங்கள் வாழும் பகுதியில் ஏறு தழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

29.நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

30.தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும். - இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

QB 365 Study Material
QUESTION BANK 365